தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

13.11.2012 P.M

14.11.2012 A.M

13th nov 2012 P.M

## சம்பா முன்பருவ பயிற்சி தொடக்கம்

விவசாயிகளுக்கான சம்பா முன்பருவ பயிற்சி முகாம் தொடங்கியது.

மதுரை மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடிக்கான முன்பருவ இயக்கங்களை வேளாண்துறை நடத்தி வருகிறது.

மதுரை மேற்கு வட்டாரத்தில் பொதும்பு கிராமத்தில் வெள்ளிக்கிழமை இப்பயிற்சி முகாம் தொடங்கியது.

இதில், விதை தேர்வு, விதை நேர்த்தி செய்தல், மண்மாதிரி பரிசோதித்தல், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பம் ஆகியவை பற்றி விவசாயிகளுக்கு வேளாண் அலுவலர்கள் விளக்கம் அளித்தனர்.

தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்கள் கலந்துகொண்டு தொழில்நுட்பங்களை தெரிவித்தனர்.

சாக்ஸ் பொறியியல் கல்லூரி என்.எஸ்.எஸ். மாணவர்கள் உதவியுடன் கிராமத்தில், பார்த்தீனியம் செடி ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுத்தல் தொடர்பான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

மேலும், வனத்துறை உதவியுடன் வாகை மற்றும் புங்கன் மரக்கன்றுகளை கிராமத்தில் நட்டு வைத்தனர்.

முகாமில், வேளாண் உதவி இயக்குநர் ஆர். வடிவேல் குமார் தலைமை வகித்தார்.

பொதும்பு ஊராட்சித் தலைவர் ஜெயராமன், கல்லூரி என்.எஸ்.எஸ். ஒருங்கிணைப்பாளர் சரவணன், வேளாண் அலுவலர் ரமேஷ்பாண்டியன் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மேலூர் ஒருபோக சாகுபடி பகுதிக்கு தண்ணீர் : விதைப்பு பணிகள் தீவிரம்

மேலூர் உள்ளிட்ட ஒரு போகம் மற்றும் கள்ளந்திரி மதகு வரையிலான இருபோக சாகுபடிப் பகுதிகளுக்கு வைகை அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர், அனைத்து கிளைக்

கால்வாய்களுக்கும் சனிக்கிழமை வந்தடைந்தது.
விவசாயிகள் தயார் நிலையில் வைத்திருந்த நாற்றங்கால்களில் விதைப்புப் பணியை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.
கண்மாய்ப் பாசன நிலங்களுக்கான விவசாயிகள் மற்றும் பாசனக் கிணறு வசதி உள்ள விவசாயிகளும் ஏற்கெனவே பெய்த மழையிலேயே நாற்றுவிடும் பணியை மேற்கொண்டிருந்தனர். இதனால், அந்த நாற்றுகள் 15 நாள் வயதுடையவையாக வளர்ந்துள்ளன.
வைகை அணையிலிருந்து நவ. 9-ம் தேதி மாலை திறந்து விடப்பட்ட தண்ணீர் பெரியாறு பிரதானக் கால்வாய் வழியாக வெள்ளலூர் அருகே உள்ள குறிச்சிப்பட்டி கண்மாய்க்கு சனிக்கிழமை வந்து சேர்ந்தது. அங்கு விவசாயிகள் மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகளும் நீரில் மலர் வெற்றிலையில் சூடம் ஏற்றி வழிபட்டனர். இதையடுத்து, அனைத்து கிளைக் கால்வாய்களிலும் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

**அணைகளில் தண்ணீர் திறப்பு : விவசாயப் பணிகள் மும்முரம்**

பெரியாறு, வைகை அணைகளில் தண்ணீர் திறந்து விடப்பட்டிருப்பதால், 5 மாவட்டங்களில் விவசாயப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.
பருவமழை சற்று தாமதாக பெய்ததால், பெரியாறு, வைகை அணைகளில் போதிய தண்ணீர் தேங்கவில்லை. இதனால், விவசாயப் பணிகளுக்கு தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டது. அக்டோபர் மாத இறுதியில் துவங்கி, சில நாள்களுக்கு முன்பு வரை நீர்பிடிப்பு பகுதிகளில் ஓரளவு மழை பெய்ததால், அணைகளுக்கு தண்ணீர் வரத்து இருந்தது.
இதனைத் தொடர்ந்து, 5 மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று நவம்பர் 9-ம் தேதி மாலையில் பெரியாறு, வைகை அணைகளில் தண்ணீர் திறக்கப்பட்டது.
பெரியாறு பாசனக் கால்வாய் மற்றும் வைகை ஆற்றின் மூலம், ராமநாதபுரம் வரை தண்ணீர் செல்கிறது. இதனால், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் பெரியாறு, வைகை ஆற்றுப் பாசன கண்மாய்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கண்மாய்களில் ஓரளவு தண்ணீர் தேங்கி வருகிறது.
கண்மாய்களில் இருந்தும் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டு 5 மாவட்டங்களிலும் விவசாயப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. இது விவசாயிகள் மத்தியில் ஆறுதலை ஏற்படுத்தி உள்ளது.
ஞாயிற்றுக்கிழமை துவங்கி திங்கள்கிழமை வரை, மதுரை உள்ளிட்ட சுற்றுப்புற மாவட்டங்கள் மற்றும் அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்யவில்லை. பெரியாறு அணைப் பகுதியில் மட்டும், ஞாயிற்றுக்கிழமை மாலையில் சாரல் மழை பெய்தது. இப்பகுதியில் 8 மி.மீ மழை பதிவானது.
அணைகளின் நீர்மட்டம்: பெரியாறு அணைக்கு வினாடிக்கு 657 கனஅடி தண்ணீர் வந்து

கொண்டிருக்கிறது. அணையிலிருந்து வினாடிக்கு 1,136 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகின்றது. அணையின் நீர்மட்டம் 120 (ஞாயிற்றுக்கிழமை 120.20 அடி இருந்தது) அடியாக குறைந்துள்ளது.

வைகை அணைக்கு வினாடிக்கு 1,006 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து வினாடிக்கு 1,260 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதில் 60 கனஅடி தண்ணீர் குடிநீர் திட்டங்களுக்கும், மீதமுள்ள 1,200 கனஅடி தண்ணீர் விவசாயத்துக்கும் திறந்து விடப்படுகிறது. அரசின் மறுஉத்தரவு வரும் வரை அணைகளிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படும் என பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 16-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் வரும் வெள்ளிக்கிழமை (நவ. 16) நடைபெறுகிறது.

ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில், வேளாண்மை தொடர்பான அனைத்துத் துறை அலுவலர்களும் கலந்து கொள்கின்றனர். அன்றைய தினம், ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பதிவேடுகளில் பொதுப் பிரச்னைகள் குறித்து பதிவு செய்த விவசாயிகள் மட்டும், மன்றத்தில் கோரிக்கைகளை தெரிவிக்க அனுமதிக்கப்படுவர். வேளாண்மை தொடர்பான தனிநபர் பிரச்னையாக இருப்பின், அந்த கோரிக்கைகளை மனுக்களாக அளிக்கலாம்.

வேளாண்மை தொடர்பான பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக நடத்தப்படும் இக் கூட்டத்தில், விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவித்துப் பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா கேட்டுக் கொண்டுள்ளார்.

## மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணை அமைக்க நிதியுதவி

மீன்குஞ்சு பண்ணைகள் அமைக்க அரசு நிதியுதவி அளிக்கிறது.

நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்தில் தெற்காறு, மேல்குண்டாறு உபவடி நிலங்களில் 8 மீன் குஞ்சு வளர்ப்பு பண்ணைகள் அமைக்கப்பட உள்ளன.

ஆண்டுக்கு 4 லட்சம் விரலிகள் உற்பத்தி திறன் என்ற அடிப்படையில், ஒரு பண்ணை அமைக்க 1 ஏக்கர் நிலப்பரப்பு இருக்க வேண்டும்.

மொத்த செலவு மதிப்பீடு ரூ. 4 லட்சம். இதில், ரூ. 3 லட்சம் (75 சதவீதம்) மானியம் வழங்கப்படும்.

போதுமான நீர்வசதியுடன் சொந்த நிலமுடைய மீன்வளர்ப்போர் மற்றும் மீன்வளத் தொழில்நுட்ப பட்டம் பெற்றவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதி யுடையவர்கள் ஆவர்.

இது தொடர்பான விரிவான தகவல்கள் மற்றும் தொழில்நுட்ப விவரங்களை அறிய மீன்வள உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம்), ப்óபச்சியம்மன் படித்துறை சாலை, மதுரை-625001

என்ற முகவரியில் தொடர்பு கொண்டு தகவல் பெறலாம்.
 தொலைபேசி எண்: 0452-2347200. ஆட்சியர் அலுவலக செய்திக்குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயத்துக்கு 10 மணி நேரம் மின்சாரம் வழங்க கோரிக்கை

விவசாயத்துக்கு தினமும் 10 மணி நேரம் மின்சாரம் வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வந்தவாசியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை மாநாட்டில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகளை தனியாருக்கு தாரை வார்க்கும் முயற்சியை கைவிட வேண்டும், இணை மின்சாரம் மற்றும் எத்தனால் உற்பத்தியை முழு அளவில் உடனடியாக தொடங்க வேண்டும், மானிய விலையில் உரம் வழங்க வேண்டும், உரங்களின் விலையை கட்டுப்படுத்த வேண்டும், விவசாயத்துக்கு 10 மணிநேரம் மின்சாரம் வழங்க வேண்டும், கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 500 விலை நிர்ணயிக்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு சங்கத் தலைவர் பெ.அரிதாசு தலைமை வகித்தார். மாநிலத் துணைத் தலைவர் அ.ஜனார்த்தனன் மாநாட்டை தொடங்கி வைத்தார். சங்கச் செயலர் அ.குருமூர்த்தி ஆண்டறிக்கை வாசித்தார். மாநிலப் பொதுச்செயலாளர் டி.ரவீந்திரன், மாவட்டத் துணைத் தலைவர் கி.பால்ராஜ், முன்னாள் மாவட்ட துணைத்தலைவர் சோலை.பழனி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.3.30 சென்னையில்
 ரூ. 3.35.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமைஅறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்
 முதல் விலை கிலோ ரூ.52, முட்டைக் கோழி கிலோ
 ரூ.47

## காளான் வளர்த்தோருக்கு பாராட்டு

ஆலங்குடி அருகே சிறந்த முறையில் காளான் வளர்த்தவர் அண்மையில் பாராட்டப்பட்டார்.

ஜாம்ஷெட்ஜி டாடா நேஷனல் அகாதெமி, அறிவியல் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் 8 ஆண்டுகளாக கிராம அளவில் சாதனையாளர்களுக்கு விருது வழங்கப்பட்டு வருகிறது.

நிகழாண்டு ஆலங்குடி பகுதியைச் சேர்ந்த கொத்தக் கோட்டை முல்லை அரும்பு மகளிர் சுய உதவிக்குழு தலைவி பிரகதாம்பாளுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. இவரது குழுவின் சார்பில் கொத்தக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள காளான் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் காளான் பல்வேறு மாவட்டங்களில் கண்காட்சியில் இடம் பெற்று பரிசுகள் பெற்றுள்ளது. இப்பண்ணையில் ஆர்வமுள்ளோருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

சென்னையில் கடந்த வாரம் நடந்த விழாவில் இக்கிராமிய சாதனையாளருக்கான விருதை விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் வழங்கிப் பாராட்டினார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் : 66.39 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 66.39 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,605 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 12,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து வினாடிக்கு காவிரியில் 3,000 கன அடி வீதமும், வெண்ணாற்றில் 600 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 1,011 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 304 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

## விவசாயிகள் மாநாடு பெரம்பலூரில் நவ .26-ல் தொடக்கம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பெரம்பலூர், அரியலூர் மாவட்ட 5-வது மாநாடு நவ.26, 27 தேதிகளில் பெரம்பலூரில் நடைபெறுகிறது .

இதுகுறித்து சங்கத்தின் மாவட்ட செயலார் என். செல்லதுரை வெளியிட்ட அறிக்கை:

துரைமங்கலத்தில் நடைபெறும் மாநாட்டையொட்டி, 26-ம் தேதி மாலை 4 மணிக்கு, பெரம்பலூர் மேற்கு வானொலி திடலில் தொடங்கும் பேரணி புதிய பேருந்து நிலைய திடலில் நிறைவடையும். அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்தில், சங்கத்தின் மாநிலத் தலைவர் பாலகிருஷ்ணன், துணைத் தலைவர் முகமது அலி, பொருளர் நாகப்பன் உள்ளிட்டோர் பேசுகின்றனர். நிறைவாக, கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றம், பயிர் மேலாண்மை, நவீன உழவடை கருவிகள் கண்காட்சி உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. 27}ம் தேதி சங்கத்தின் செயல்பாடுகள் குறித்த விவாதம் மற்றும் திட்டமிடலும், புதிய நிர்வாகிகள் தேர்வும் நடைபெறும்

## மக்கள் குறைதீர் கூட்டம் : விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கக் கோரி மனு

கூட்டுறவுச் சங்கத்தில் விவசாயிகள் பெற்றக் கடன் தொகையை பதிவேட்டில் வரவு வைத்து, மீண்டும் கடன் வழங்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் மனு அளித்தனர்.

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில்,

வலங்கைமான் அருகேயுள்ள நார்த்தங்குடி கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஆர். சக்கரவர்த்தி தலைமையிலான விவசாயிகள் அளித்த மனு:

நார்த்தங்குடி தொடக்க வேளாண்மை சங்கத்தில் ராஜேந்திரன், குஞ்சிதபாதம், செந்தில்குமார், வைத்திலிங்கம், சிங்காரவேல், ஆனந்த முருகன், தட்சிணாமூர்த்தி, மணிவண்ணன் ஆகியோர் உறுப்பினராக உள்ளோம்.

உறுப்பினர்கள் அனைவரும் தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட வட்டியில்லாக் கடன் பெற்று முறையாக குறிப்பிட்டக் காலத்தில் கடன் செலுத்தியுள்ளோம். 2011-ம் ஆண்டு சம்பாவுக்கு கடன் பெற்று 11.2.2012-ம் தேதியில் நிலுவையின்றி தொகை செலுத்தி கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து முத்திரை வைத்த ரசீது பெற்றுள்ளோம்.

நிகழாண்டு குறுவைக்குக் கடன் கேட்டு ஆவணங்கள் கொடுத்தும் கடன் கொடுக்க கூட்டுறவுச் சங்கம் முன்வரவில்லை.

விவசாயிகள் செலுத்திய கடன்தொகை பதிவேட்டில் வரவு வைக்கவில்லை என்று தெரிகிறது. எனவே, மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை மேற்கொண்டு விவசாயிகள் செலுத்திய தொகையை பதிவேட்டில் பதிவு செய்து மீண்டும் எங்களுக்கு கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், முதியோர் உதவித்தொகை, மனைப்பட்டா உள்ளிட்டப் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 250 மனுக்கள் அளிக்கப்பட்டன. அப்போது, ஆறு பயனாளிகளுக்கு குடும்ப அட்டை வழங்கப்பட்டது.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 17 பேருக்கு மாதம் ரூ. 1,000 வீதம் உதவித் தொகைப் பெற ஆணை வழங்கப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ந. ஜீவகனி, சமூகப் பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் ப. லலிதாவதி ஆகியோர் பங்கேற்றனர்.

## சிறுதானிய விதை உற்பத்தி பயிற்சி

சங்கரன்கோவில் அருகே கே.வி.ஆலங்குளத்தில் விதை கிராமத் திட்டத்தின்கீழ் சிறுதானிய விதை உற்பத்தி பயிற்சி முகாம் ஊராட்சித் தலைவர் ஆர்.துரைராஜ் தலைமையில் நடைபெற்றது.

சிறுதானிய தொழில்நுட்ப சாகுபடி குறித்து வேளாண் துணை இயக்குநர் பெருமாள், விதைகள்

தரநிலைகள் குறித்து வேளாண் உதவி இயக்குநர் ஜெயசெல்வின் இன்பராஜ் ஆகியோர் பேசினர். வேளாண் அலுவலர் பா.விஜயலட்சுமி, துணை வேளாண் அலுவலர் ஆ.ரவிச்சந்திரன் உள்ளிட்டோரும் பேசினர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் மாரியம்மாள், லட்சுமணன், நவநீதன், நாவுக்கரசு, குமரேசன் ஆகியோர் செய்திருந்தனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

14.11.2012 A.M

## அமராவதி அணை இந்தாண்டு நிரம்பவில்லை ஆயக்கட்டு விவசாயிகள் ஏமாற்றம்

உடுமலை:வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்யாமல் அமராவதி அணை இந்தாண்டு நிரம்பவில்லை. இதனால், நெல் சாகுபடி மேற்கொள்ளும் ஆயக்கட்டு விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.உடுமலை அருகேயுள்ள அமராவதி அணை மூலம் திருப்பூர்,கரூர் மாவட்டத்திற்குட்பட்ட 55 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் 838.16 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு நீர்ப்பிடிப்பு பகுதிகளை உள்ளடக்கிய அமராவதி அணை, ஆண்டிற்கு மூன்று முறை நிரம்பும் வகையிலும், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை என இரண்டு காலங்களிலும் நீர் வரத்து நிலவும் அணையாகவும் உள்ளது.கடந்த 1958ம் ஆண்டு முதல் 2011ம் ஆண்டு வரை 30 முறை அணை நிரம்பியுள்ளது. 1969,1970,1973, 1974,1976,1980,1981,1982,1985,1988.1990,1991, 2001,2002,2003,2006 ஆகிய ஆண்டுகளில் அணை நிரம்பவில்லை.கடந்த இரண்டு ஆண்டுகளாக, வடகிழக்கு பருவமழை நீர்ப்பிடிப்பு மற்றும் அணைப்பகுதியில் போதுமான அளவு பெய்யாததால் அணை நிரம்பாமல் விவசாயிகளுக்கு ஏமாற்றமளித்து வருகிறது. கடந்த 2010 ம் ஆண்டு நவ., மாதம் அணை நிரம்பி வினாடிக்கு 4,935 கன அடி தண்ணீர் உபரியாக வெளியேற்றப்பட்டது. வடகிழக்கு பருவ மழைக்காலங்களிலேயே அமராவதி அணை அதிக முறை நிரம்பியுள்ளது.

திருப்பூர், கரூர் மாவட்டத்திற்குட்பட்ட 29 ஆயிரத்து 387 ஏக்கரை உள்ளடக்கிய பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு ஜூன் மாதத்திலும், திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 25 ஆயிரத்து 250 ஏக்கர் பரப்புள்ள புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு ஜூலை மாதத்திலும் தண்ணீர் வழங்கப்பட வேண்டும்.இந்த நடைமுறை பருவமழைகள் குறைவால், கடந்த சில ஆண்டுகளாக கைவிடப்பட்டுள்ளது. கோடை காலம் துவங்கியதும், அணையின் நீர்மட்டம் பயன்படுத்த முடியாத நீர் இருப்பை எட்டி, ஆற்றங்கரையோரத்திலுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது.ஒவ்வொரு ஆண்டும் பருவமழை குறைந்து, அமராவதி அணை நிரம்பாமல், குறித்த நேரத்தில், குறுவை மற்றும் சம்பா நெல் சாகுபடி பணிகள் மேற்கொள்ள முடியாதது விவசாயிகளிடையே வேதனையை ஏற்படுத்துகிறது.இந்தாண்டு நவ., மாதத்தில், கிடைத்த நீர் இருப்பு பாசனத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது. நேற்றைய காலை நிலவரப்படி அமராவதி அணையின் நீர் மட்டம் 90 அடியில், 60.79 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு

117 கன அடி நீர் வரத்தும், அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு வினாடிக்கு 750 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால், வரும் கோடை காலத்தில், அணையின் நீர் இருப்பு திருப்தியாக இருக்காது என விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.ஒரே ஆறுதல்
பருவமழை குறைவால், அமராவதி அணை பாசன நீர் நிர்வாகம் பல்வேறு சிக்கல்களை சந்திக்கிறது. இந்நிலையில், பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கான அணைக்கட்டுகள் நீண்ட இடைவெளிக்கு பிறகு தற்போது புதுப்பிக்கப்படுகிறது. புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கான பிரதான வாய்க்காலும் முழுவதுமாக புதுப்பிக்கப்பட்டு வருகிறது.
இதனால், நீர் விரயத்தை வெகுவாக குறைத்து, நெல் சாகுபடிக்கான நீர் நிர்வாகத்தை சமாளிக்கலாம் என விவசாயிகள் கருதி வருகின்றனர்.

## விலை உயராத பாமாயில்



மதுரை:தீபாவளி நாளிலும், பாமாயில் விலை உயரவில்லை. நல்லெண்ணெய்விலை உச்சத்திலேயே இருந்தது. அனைத்து எண்ணெய்யும் கடந்த வார விலையில் விற்பனையாகின்றன. நேற்று பாமாயில் ஒரு லிட்டர் ரூ. 53.50, சூரியகாந்தி எண்ணெய் 82, தேங்காய் எண்ணெய் 78, நல்லெண்ணெய் 165, தும்பை நல்லெண்ணெய் 190, கடலை எண்ணெய் 115, வனஸ்பதி 70, ரைஸ்பிரான் ஆயில் 76க்கு விற்கப்பட்டது.எண்ணெய் வியாபாரிகள் சங்க நிர்வாகி கிருஷ்ணமூர்த்தி கூறுகையில்,""பாமாயில் விலை தொடர்ந்து மாற்றமின்றி உள்ளது. நல்லெண்ணெய் விலை குறையாமல் உச்சத்தில் உள்ளது. எண்ணெய் விலை, பொங்கல் வரை மாற்றமின்றி இருக்க வாய்ப்புள்ளது,'' என்றார்.

**பூக்கள் விலை மீண்டும் உயரும் ?**

மதுரை:மதுரையில், தீபாவளியையொட்டி, விலை உச்சத்தில் இருந்த பூக்கள், நேற்று கடும் வீழ்ச்சி அடைந்தன.நேற்று முன் தினம் மல்லிகைப்பூ கிலோ ரூ.500க்கு விற்கப்பட்டது. நேற்று ரூ.250 வரை விற்பனையானது. கடந்த வாரம் ரூ.1000க்கு விற்ற கனகாம்பரம் நேற்று ரூ.400க்கும், ரூ.500க்கு விற்ற பிச்சிப்பூ ரூ.150க்கும் விற்கப்பட்டது. ழிக்கொண்டை ரூ.60, செவ்வந்திப்பூ ரூ.80-100, சம்பங்கி ரூ.40, அரளிப்பூ ரூ.100 தாமரை பூ ஒன்று - ரூ.15, ரோஜா- ரூ.40க்கு விற்கப்பட்டது.பூ வியாபாரிகள் சங்கத் தலைவர் சோ.ராமச்சந்திரன் கூறுகையில், ""வரத்துக் குறைவால் தீபாவளி நாளில் உச்சத்துக்கு சென்ற பூக்கள் விலை, நேற்று வாங்குவோர் குறைந்ததால் விலையும் குறைந்தது. இனி வரும் முகூர்த்த நாட்களில் விலை உயர வாய்ப்புள்ளது," என்றார்.

**பிரியாணி அரிசி ரூ.6 அதிகரிப்பு**



மதுரை:மதுரையில், தீபாவளியையொட்டி, பிரியாணி அரிசி கிலோவுக்கு ரூ. 6 அதிகரித்தது.நேற்றைய அரிசி விலை விபரம் (அடைப்புக் குறிக்குள் பழைய விலை): கர்நாடகா டீலக்ஸ் பொன்னி பழசு- ரூ.44 (42), காவேரி சோனா- 41(40), செல்லப் பொன்னி புதுசு- 29, அம்பை 16 இட்லி அரிசி- 31, கல்சர் பொன்னி பழசு- 33 (32). பிரியாணி அரிசி - 62 (68), இரண்டாவது ரகம்- 60 (58) ஆக உள்ளது. இவற்றில் பிரியாணி அரிசி கிலோவுக்கு ரூ.6 அதிகரித்துள்ளது. பச்சரிசி-42(41). இரண்டாவது ரகம்- 37, மூன்றாவது ரகம்-33.""மின் தட்டுப்பாடு, தீபாவளியையொட்டி பிரியாணி அரிசியின் தேவையும் அதிகரித்துள்ளதால், விலையும் அதிகரித்துவிட்டது, என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

**பசுந்தேயிலை வரத்து அதிகரிப்பால் கோட்டா முறை அமல்படுத்த திட்டம்**

மஞ்சூர்:"பசுந்தேயிலை வரத்து அதிகரிப்பால் கோட்டா முறை மீண்டும் வரும் அபாயம் ஏற்பட்டுள்ளது,' என விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் எட்டுக்கு மேற்பட்ட கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள்

செயல்பட்டு வருகின்றன. இப்பகுதிகளில் பெய்த பரவலான மழையால் கடந்த இரண்டு வாரங்களாக தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை வரத்து அதிகரித்து வருகிறது. மூன்று ஷிப்ட் அடிப்படையில் தேயிலை உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. தற்போது அளவுக்கு அதிகமாக பசுந்தேயிலை தொழிற்சாலைகளுக்கு வினியோகிப்பதால், தேயிலை உற்பத்தி மேற்கொள்ள முடியாமல் தொழிற்சாலை நிர்வாகம் திணறி வருகிறது.இதில் சில, கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் கடந்த சில மாதங்களாக ஒரு நாள் விட்டு ஒரு நாள் பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்படுவதால், அங்கத்தினர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில்"கோட்டா' முறை அமுல்படுத்த தொழிற்சாலை நிர்வாகம் திட்டமிட்டிருப்பதால், தேயிலை தோட்டங்களிலேயே பசுந்தேயிலை வீணாகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

"கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் அங்கத்தினர்களிடமிருந்து வாங்கும் பசுந்தேயிலையை தொழிற்சாலைகளில் கொட்டி வைக்க கூடுதல் "டிரப்கள்' அமைக்கப்பட வேண்டும்,' என அங்கத்தினர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால், தொழிற்சாலை நிர்வாகம் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாததால், தற்போது பசுந்தேயிலை அதிகரிக்கும் சமயத்தில் கோட்டா முறையை அமுல்படுத்த தொழிற்சாலை நிர்வாகம் திட்டமிட்டதால் அங்கத்தினர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்."தாமதிக்காமல் பசுந்தேயிலைகளை கொட்டி வைக்க கூடுதல் டிரப்கள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.விலை குறைவு: அக்டோபர் மாதத்திற்கான பசுந்தேயிலை விலை "இன்கோசர்வ்' அலுவலகத்தில் நிர்ணயிக்கப்பட்டது. இதில், செப்டம்பர் மாதத்தை விட 1.50 ரூபாய் கிலோவுக்கு நிர்ணயிக்கப்பட்டதால் விவசாயிகள் அதிருப்தியடைந்துள்ளனர்.

## உழவர் பாதுகாப்பு திட்ட மனுக்கள் : கரூர் கலெக்டர் ஆய்வு

கரூர்: கடவூர் தாலுகா முள்ளிப்பாடி வி.ஏ.ஓ., அலுவகத்தில், உழவர் பாதுகாப்பு திட்டம் கீழ் பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து கலெக்டர் ஜெயந்தி ஆய்வு செய்தார். இதுகுறித்து கலெக்டர் ஜெயந்தி தெரிவித்துள்ளதாவது: தமிழக முதல்வர் விவசாய மக்கள் பயன்பெறும் வகையில் திருமண நிதியுதவி, கல்வி உதவித்தொகை, விபத்து மற்றும் இயற்கை மரணம் நிவாரணத் தொகை மற்றும் முதியோர் உதவித்தொகை போன்ற, பல்வேறு உதவித்தொகைகள் உழவர் பாதுகாப்பு திட்டம் கீழ் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், பயனாளிகளை தேர்வுச் செய்ய, கரூர் மாவட்டத்தில் அனைத்து கிராமங்களிலும் உழவர் பாதுகாப்பு திட்டம் கீழ் பயன்பெற, கடந்த, 5ம் தேதி முதல், 9ம் தேதி வரை, சிறப்பு முகாம்கள் நடந்தன. முகாமில், கரூர் மாவட்டத்தில் உள்ள, 5 தாலுகாவில் உழவர் பாதுகாப்பு திட்டம் கீழ், 3,330 கோரிக்கை மனுக்கள், இதர திட்டம் கீழ், 1,068 மனுக்கள் என மொத்தம், 4,871 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய நடவடிக்கை

வருவாய்துறை சேர்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கடலூர் தாலுகா முள்ளிப்பாடி வி.ஏ.ஓ., அலுவலகத்தில் இம்மனுக்கள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. விரைவில் பெறப்பட்ட மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்.

## கரும்பு சாகுபடி நவீன தொழில்நுட்ப பயிற்சி

புதுக்கோட்டை: வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில், கரும்பு சாகுபடியில் நவீன தொழில்நுட்பம் குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி முகாம், 16ம் தேதி நடக்கிறது. புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் அறிவியல் நிலையத்தில் பயிர் சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து, விவசாயிகளுக்கு அவ்வப்போது பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்தமட்டில் நெல்லுக்கு அடுத்தபடியாக, கரும்பு அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கரும்பு சாகுபடியில் உரம் மற்றும் தண்ணீர் விரயம் ஆவதை தவிர்க்கவும், உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் ஏதுவாக, துல்லிய பண்ணையம் என்ற தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதை பின்பற்றி கரும்பு சாகுபடி செய்வதற்கான வழிமுறைகள் குறித்து, விவசாயிகளுக்கு வரும், 16ம் தேதி பயிற்சி அளிக்கப்படுகிறது. மாவட்டத்தில் கரும்பு சாகுபடி செய்துவரும் விவசாயிகள் அனைவரும் இதில் பங்கேற்கலாம். இதுகுறித்து மேலும் தகவல் பெற விரும்பும் விவசாயிகள் வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தை, 04322-290321 என்ற டெலிஃபோன் எண்ணில் தொடர்புகொள்ளலாம்.

## சுத்தமலை கிராமத்தில்விவசாயிகளுக்கு பயிற்சி

சங்கராபுரம்;சங்கராபுரம் அடுத்த சுத்தமலை கிராமத்தில் விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி நடந்தது.விதை கிராம திட்டத்தின் கீழ் ரிஷிவந்தியம் அடுத்த சுத்தமலைகிராமத்தில் நடந்த பயிற்சி முகாமிற்கு ஊராட்சி தலைவர் தங்கராஜ தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் தாமோதரன் முன்னிலை வகித்தார்.முகாமில் நெல் விதைநேர்த்தி செய்வதின் அவசியம், நாற்றங்கால் பராமரிப்பு, நடவு, பூச்சிநோய் பாதுகாப்பு முறை பற்றி வேளாண்மை அலுவலர் ஆனந்தன் விளக்கினார்.களை நிர்வாகம், நீர் மேலாண்மை, அறுவடை பின் செய் நேர்த்தி குறித்து வேளாண்மை அலுவலர்கள் முத்து விஜயன், துரைராஜ், அப்பாஸ், செந்தில், ராமச்சந்திரன், சேகர் ஆகியோர் பேசினர்.

## அட்மா திட்டத்தின் கீழ் தரமான விதை உற்பத்தி செய்ய தொழில்நுட்ப பயிற்சி

நாமக்கல்: விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறை மூலம், தரமான சான்று பெற்று விதைகளை உற்பத்தி செய்வதற்காக, திருச்செங்கோடு, பள்ளிபாளையம் வட்டாரத்தில் விதைப்பண்ணை விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தில், திருச்செங்கோடு பி.டி.ஓ., அலுவலகத்தில் தொழில் நுட்ப பயிற்சி முகாம் நடந்தது. மாவட்ட வேளாண் துணை இயக்குனர் (பொறுப்பு)

முரளிதரன், பயிற்சி முகாமை துவக்கி வைத்து, தரமான விதை உற்பத்தியின் நோக்கம் பற்றியும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, இயற்கை வேளாண் முக்கியத்துவம், உயிர் உரத்தின் அவசியம் குறித்தும் விளக்கினார். மேலும், விதைப்பண்ணை விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதையைத்தான், சக விவசாயிகள் பயன்படுத்துகின்றனர் என்பதை உணர்ந்து, தரமான விதையை உற்பத்தி செய்து வழங்க வேண்டும், என அறிவுறுத்தினார். விதைச்சான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம், சான்று விதையின் முக்கியத்துவம், விதைப்பண்ணை அமைக்கும் போது, விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் மற்றும் தொழில் நுட்பங்கள் பற்றியும், அங்ககச்சான்றிப்பு குறித்தும் விளக்கினார். விதைச்சான்று அலுவலர் கந்தசாமி, விதைகளின் வகைகள் மற்றும் விதைப்பு அறிக்கை பதிவு செய்தல், வயலாய்வு, அறுவடை, சுத்தப்பணி, மாதிரி எடுத்தல், சான்றட்டை பொருத்துதல் குறித்துள் விளக்கினார்.நடமாடும் மண் ஆய்வு கூட அலுவலர் தண்டபாணி, தோட்டக்கலை உதவி இயக்குனர் மாலதி, வேளாண் அலுவலர் மணிமேகலை ஆகியோர், அவரவர் துறைகளில் செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்கள் குறித்து பேசினர். வேளாண் அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

14.11.2012 A.M

## மேட்டூர் நீர் மட்டம் 64 அடியாக சரிவு : விவசாயிகள் கலக்கம்



மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர் மட்டம் 64.63 அடியாக குறைந்துள்ளது. நீர் மட்டம் மளமளவென சரிந்து வருவதால் டெல்டா பகுதி விவசாயிகள் மீண்டும் கலக்கம் அடைந்துள்ளனர். காவிரி டெல்டா பாசனத்திற்கு ஆண்டு தோறும் ஜூன் மாதம் 12ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும். ஆனால் இந்த ஆண்டு போதிய நீர் இல்லாததால் அணை திறக்கப்படவில்லை. செப்டம்பர் மாதம் 17ம் தேதி அணை திறக்கப்பட்ட நிலையில் தற்போது டெல்டா பகுதிகளில் சாகுபடி பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன. டெல்டா பகுதிகளில் பாசனத்திற்கு நீர் தேவை அதிகரித்துள்ளதால் மேட்டூர் அணையில் இருந்து கடந்த 5 நாட்களாக விநாடிக்கு 12 ஆயிரம் கனஅடி வீதம் நீர் திறந்து விடப்படுகிறது. அதே நேரத்தில் நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் அணைக்கு நீர் வரத்து 2ஆயிரம் கனஅடியாக குறைந்துள்ளது.

இன்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு விநாடிக்கு 2174 கனஅடி வீதம் நீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து விநாடிக்கு 12,001 கனஅடி வீதம் நீர் திறந்து

விடப்படுகிறது. நீர் வரத்தை விட 5 மடங்கு அதிக அளவில் நீர் திறக்கப்படுவதால் நீர் மட்டம் மளமளவென குறைந்து வருகிறது. அணையில் இருந்து இன்றும் 18 நாட்களுக்கு தான் நீர் திறக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. டெல்டா பாசனத்திற்கு ஜனவரி மாதம் கடைசி வரை நீர் தேவைப்படும். ஆனால் நிலைமை அபாய நிலையில் இருப்பதால் வடகிழக்கு பருவமழை மீண்டும் கைகொடுக்க வேண்டும் அல்லது கர்நாடகம் தமிழகத்திற்குரிய காவிரி நீரை திறந்து விடவேண்டும். இவை நடக்காவிடில் டெல்டா பகுதிகளில் அறுவடையை எட்டும் நேரத்தில் நீரின்றி பாதிக்கப்படும் நிலை இருப்பதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.